உளி-1 | ஓசை-52 | ஜூன்-2021 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
மதன் குமார்

அட்டைப்படம் :
படைப்பு டிசைன் டீம்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| பூங்கோதை கனகராஜன் | - 4 |
| காயத்ரி ராஜசேகர் | - 5 |
| நா.வே.அருள் | - 6 |
| ரிஸ்கா முக்தார் | - 7 |
| ஜே.ஜே.அனிட்டா | - 8 |
| மகிழினி காயத்ரி | - 9 |
| கா.ரஹ்மத்துல்லாஹ் | - 10 |
| சந்துரு | - 11 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | - 12 |
| சங்கரி சிவகணேசன் | - 13 |
| அம்பிகா குமரன் | - 14 |
| மணிவண்ணன் மா | - 15 |
| துரை.நந்தகுமார் | - 16 |
| சரண்யாசத்தியநாராயணன் | - 17 |
| மகேந்திரன்கோ | - 18 |
| ராம் பெரியசாமி | - 19 |
| கா.ஶ்ரீதரன் | - 20 |
| தோழன் பிரபா | - 21 |
| உமா மஹேஸ்வரி பால்ராஜ் | - 22 |
| சுஜாதா கண்ணன் | - 23 |
| மழைக்குருவி | - 23 |
| மதுரா | - 24 |
| தங்கேஸ் | - 25 |
| சுப. முத்துக்குமார் | - 26 |
| பிரபுசங்கர் க | - 27 |
| முகமது பாட்சா | - 28 |
| மு.முபாரக் | - 29 |
| த. ரவீந்திரன் | - 29 |
| சௌவி | - 30 |
| கதிரவன் வீ | - 31 |
| குமரன்விஜி | - 31 |
| இனியவன் காளிதாஸ் | - 32 |
| தி. கலையரசி | - 33 |
| கருவை ந.ஸ்டாலின் | - 34 |
| அமுதா தமிழ்நாடன் | - 35 |
| தீபிகா நடராஜன் | - 36 |
| நிஷா வெங்கட் | - 36 |
| நளாயினி ராஜரத்னம் | - 37 |
| கிருஷ்டினா அருள்மொழி | - 38 |
| வீரசோழன்.க.சோ. திருமாவளவன் | - 39 |



இரவு ஒன்று புலர்கிறது

ஞாயிறு மறையத்
காத்திருந்து

திங்கள் உலா வர

நட்சத்திரங்கள் கண்சிமிட்ட
காத்திருக்கிறது

மொட்டுகள் பெரிதாகி
தன் ரகசியங்கள்
மலரத் துடிக்கும்
பூக்கள்

நித்திரை கண்ணிமைக்குள்
கூடி
கனவுகள் உலா வரும்
நேரம்

மகிழ்ச்சிக்கும் துன்பத்துக்கும்
தூக்கம் வராமல்
தாக்கமளிக்கும் நினைவுகள்

இருள் போர்வையுள்
மருளத் தோன்றும்
இருட்டு தெருக்கள்

களவுக்கும் கற்பனைக்கும்
துணையாய்

வாலிபத்திற்கும் வயோதிகத்திற்கும்
யோசனைகளோடு

பறவைகள் கூடடைந்து
மனிதர்கள் வீடடைந்து
குடும்பத்தை ஒன்றிணைத்து

உணர்வுகளோடு
நோய்க்கும் பேய்க்கும்
துணையாய்

விடியும்வரை இன்பத்திலோ துக்கத்திலோ ஏதுமற்ற
நிலையிலோ
எப்படியோ இருளை
கவியவிட்டு இருந்த
இடம் தெரியாமல்
விடிந்தே போகிறது

பகலுக்கு இரவும்
இரவுக்கு பகலும்
நாளுக்கும் இரு பக்கங்கள்
நாணயமாய்.

➤ **பூங்கோதை கனகராஜன்**



அவள் கைகள்
நீண்டு தொங்கிக் கொண்டிருந்தன
அவசர ஊர்தியில்
அதை எடுத்து உடலோடு
வைத்த போதிலும்
பின்பு மின் அதிர்வு வைத்த போதிலும் அவ்வாறே
கட்டிலுக்கு வெளியே நீண்டிருந்தது
குளிர்ப்பதனப் பெட்டியில்
வைத்திருந்தபோது
வலுவாக இழுத்துக் கட்டியிருந்தார்கள்
குளிப்பாட்டும்போதும்
கைகள் விரைத்து நீண்டபடியே
தேற்றும் ஒரு சொல்லுக்கோ
ஒரு கைப்பற்றுதலுக்கோ
அத்தனை ஏங்கியிருப்பாள் போல.

➤ காயத்ரி ராஜசேகர்

# அப்பாக்களின் உலகம்



அம்மாக்களின் இதயம்
முத்தங்களாலான உண்டியல் என்றால்
அப்பாக்களின் இதயம்
நாணயங்களாலான உண்டியல்.

குழந்தைகள் விளையாட
அம்மாக்கள்
அப்பாக்களின் நுரையீரல்களில்தான்
காற்றினை
நிரப்பித் தருகிறார்கள்.

உலக தந்தையர் தினத்தில்
அநேக சாயல்களில்
அப்பாக்களின் முகங்கள்.

மகன்களின் தொட்டிலில்
குழந்தைகளான அப்பாக்கள்.

வரவேற்பறைகளில்
முகத்தைத் தொங்கப் போட்டு
அமர்ந்திருந்த அப்பாக்கள்.

பூஜையறையில்
முதுகு காட்டிக்
கடவுள்களிடம் முணுமுணுத்த அப்பாக்கள்.

மருத்துவமனைப் படுக்கைகளில்
மருந்தின் கசப்பில்
முகம் சுளித்த அப்பாக்கள்.

முதியோர் இல்லத்தில்
அநாதைகளாகக் கைவிடப்பட்ட அப்பாக்கள்

சுவரொட்டிகளில்
காணாமல்போன
அறிவிப்புகளின் அப்பாக்கள்

ஆனால் அம்மாக்களை
வஞ்சித்தவர்கள்தான் அப்பாக்கள்.
கடைசிவரையிலும்
சமையலறையில்
கால் பாவாத அப்பாக்கள்

இப்போது
மகன்களின் சாயலில்
அப்பாக்கள் தெரிய ஆரம்பித்துவிட்டார்கள்.

அம்மாக்களின் அன்பு
ஒரு மலரைப்போல
மணம் பரப்பிக் கொண்டிருந்தாலும்
அப்பாக்களின் அன்பு
அல்வாவைப்போல இறுகியிருக்கிறது.

பிள்ளைகளுக்குக் கொடுக்கமுடியாமல்போன
முத்தங்கள்
அப்பாக்களின் உதடுகளில்
மீசைகளாகத் தடித்துவிடுகின்றன.

அப்பாக்களின் அங்க அடையாளங்கள்
அபூர்வமானவை
முகச் சுருக்கங்களில் மறைந்துபோன
முகங்கள்
காயங்களால் விந்தி நடக்கும் கால்கள்
பல்செட் கழன்ற சிரிப்புகள்
மாற்றுடை இல்லாத மார்புகள்
கழுதைப் பொதி முதுகுகள்.

எப்படியெப்படியெல்லாமோ இருந்தாலும்
ஒரு விஷயத்தில் மட்டும்
அப்பாக்கள்
ஒன்றாகவே இருக்கிறார்கள்.
பிள்ளைகளுக்குத் தந்து சென்ற உண்டியலிலிருந்து
ஒற்றை நாணயத்தைத்தான்
ஏற்றுக் கொள்கிறார்கள்ஞ்.
நிறைவான வாழ்வின்
நெற்றிக்காசுக்காக.

➤ நா.வே.அருள்



இறந்த பின்பு
இரங்கல் கவிதையோடு
வராதீர்கள் என்னிடம்
நான் இருக்கும் போதே
என்னை
இல்லாமலாக்கியவர்கள்
எவரும்

மூச்சடங்கிய பின்பு
பதறிக்கொண்டு ஓடி வராதீர்கள்
என்னிடம்
நான் இருக்கும்போதே
என்னைத்
தொலைத்துப்போனவர்கள்
எவரும்

மண்மூடிய பின்பு
மனவருத்தத்தோடு
மன்னிப்புக் கேட்காதீர்கள்
என்னிடம்
நான் இருக்கும்போதே
என்னை மறந்திருந்தவர்கள்
எவரும்

இருப்பின்
அச்சங்களைக் களையத்தான்
யாரையேனும்
அணைத்துக்கொள்ள
வேண்டும்

இல்லாமையின்
இருட்டில் நடந்திடத்தேவையில்லை
எனக்கு
எவர் துணையும்

ஆதலால்
வராதீர்கள் எவரும்
நான் இறந்த பின்பு
என்னிடம்
ஓர் இரங்கல் கவிதையோடு!!!

➤ ரிஸ்கா முக்தார்

# இசையைப் பற்றிப் பேசு..



பழுத்த வயது செவிகளுக்கு.

உள்ளோடிப் பரிணமிக்கும்
உனது குரல்
இசையைத் தூண்டித் தருவிக்கும்
காற்றின் மாதிரிச் சிறகு.

கவலைகள் அற்றுப் போன
யாத்திரைகளுக்கான
துணைப் பயணத்தின் நிழல்..
நீ ரசித்துக் கொடுத்த இசை.

இசையைப் போல உரையாடு.

வேறெப்படி
உன் நலங்காண நான் விழைவது..

நம்மைப் பிடிக்கிற இசைக்காக
கொஞ்சம் ஆயுள் தருவோம்.

உயிர் புத்தகம்
பிறகு இசை..
இவை தானே நாம் தோற்றுவித்த
பிரபஞ்சம்.

மௌனமென்பது
இசையின் வலி வடிவம்.
உணர்வின் திசுக்களினின்று
உயிர் இடவலமாய் இடம்பெயரக் கூடும்

இசை போல இரு.
அதுவே போதும்.
அது போல இரு.
இசையே போதும்.

➤ ஜே.ஜே.அனிட்டா



அண்ணாந்து பார்த்து
கண்களால்
கதை பேசி
தலையசைப்புகளோடு
ரகசியமாய் உரையாடி
நிலவை
தன் வீட்டிற்கு
அழைத்துச்
செல்லும்
சிறுமி
மீட்டெடுத்து
செல்கிறாள்
நிலவோடான
எனது
பால்யங்களையும்
நிலவில்
நெல்குத்தும்
பாட்டியையும் !

➤ மகிழினி காயத்ரி



அவசரமாய்க் கிளம்புகையில்
என்னிருப்பிடத்தில் நீ
தவற விட்டுச்சென்றச் சாவி
உன்வீட்டுக் கதவருகில் சென்றதும்
நினைவு வருமே...

அந்த
அவதியைத்தான் இப்போது
நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்...

உனது
நேசத்தை அழுந்தப் பதிந்துகொண்ட
மனது உன் முகத்தைப் படிக்கவா
மறந்துவிடும்?
அதிலுன்
மனதின் வரிகள் ஒளிர்வதை
அறியாதா என்ன?

நிரந்தரப் பிரிவை
நமக்கு வரமாக்கியவர்களால்
எதேச்சையான நம் சந்திப்பைத்
தடுக்க முடியாமல் போய்விட்டது
பார்த்தாயா?

சின்ன விசும்பல்
மெல்லியத் தடுமாற்றம்
இதையெல்லாம்
கடந்து உன் குழந்தையின்
நலனை விசாரித்தவன்
உன்னவன் நலனை நான்
கேட்கவே இல்லை...

சொர்க்கத்தில்
இருப்பவனைப் பற்றிக் கேள்வியெதற்கு?
பாவம்
உன் குழந்தைதான் என் நினைவினாலான
அனல் மூச்சுக்களை
வாங்கிக் கொண்டிருக்கும்...

கடைசி வரை
என் கண்களைப் பார்த்துன்னால்
பேசமுடியவில்லை என்று
தெரிந்துவிட்டது.

ஒன்று செய்...
சாவி தொலைந்தப் பூட்டை
உடைக்கும் போது
அதிலென் நினைவுகளைப் பொறுத்தி
வாசலோடு வைத்துவிடு...

சிறுபிள்ளைத் தனம்தான் இது...
பரவாயில்லை...
புதியவரோடு
பேசினாலும் சந்தேகிக்கும் உலகிது.
பழைய
காதலரின் நேசத்திற்கு
மகுடம் சூட்டவா போகிறது?

புதிதாயொரு
பயணத்திற்கு நாள் குறித்துவிட்டேன்.
உனது திருமணத்தன்று
எண்ணியது போன்றே
சாகும் வரை உன்னைச்
சந்திக்கக் கூடாதென்று எனக்கு நானே
விதித்துக் கொண்டேன்...

சாத்தியமா
எனத் தெரியவில்லை...
உன்
காதலின் நினைவுகளைச் சுமப்பதற்கும்
என் காதலின் நினைவுகளைக்
கடந்து நீ வாழ்வதற்கும்
இது தேவையாய் இருக்கிறது.

ம்ஹூம்...
பொல்லாத உலகாச்சே...
உன் மூச்சிருக்கும் வரை
நீ மரணிக்காதிருக்க
நான் வேறென்ன செய்ய?

➤ கா.ரஹ்மத்துல்லாஹ்

# முனி பிடித்த நாள்



கொதிக்கும் காய்ச்சலில
கொஞ்சமா வலிப்பு வந்து
அடங்கிய ராத்திரியில்
அலறிய அம்மாவிடம்
கசாயம் விபூதி தவிர
வேறெதுவும் மருந்தில்ல...

காலைவரை கண்விழிச்சி
பார்த்துக்கிட்ட களைப்போட
ஆறேழு வயசிருக்கும்
பிள்ளைய தூக்கிக்கிட்டு
நாலு மைல் சுமந்து சென்று
சின்னாஸ்பித்திரி ஊசிபோட்டு
சாயுபு தாத்தா கிட்ட
தாயத்து கட்டிகிட்டு
ஊருக்குள்ள வந்த பின்பு
ஒடம்பு கொஞ்சம் பரவாயில்ல

சாயங்கால நேரத்துல
சாமியாடி மண்ணாங்கட்டி
வீட்டுக்கு போகையிலே
பட்டை அடிச்சிகிட்டு
கடா மீசைதடவிக்கிட்டே
உக்கிரமா பார்த்தவரு
வேப்பிலை அடிச்சிகிட்டே
கொட்டாவி விட்டபடி
காத்து தொடுப்பு இருக்குதுன்னும்
காட்டுக்கொல்லை பக்கத்துல
சனிமூலை கெணத்தாண்ட
ஜடா முனி பிடிச்சிருக்கு
கழுப்பெடுத்து பூஜை செஞ்சா
காலத்துக்கும் நல்லதுன்னு
சொல்லி முடிச்சவரு
அத்தோடு நிக்காம...

சாராயம் ஒரு புட்டி
சுருட்டு ஒரு கட்டு
கற்பூரம் விபூதி
சடங்கு சாமான்கள்
கூடவே கோழி ஒன்னு
அடுத்தவாரம் செய்திடலாம்
பட்டியலை தந்தாரு...

வாரம் ஒன்றாக
ஒடம்பும் தேறிவிட
ஊரடங்கிபோன ஒரு
சனிக்கிழமை ராவினிலே
கரம்புக் கழனியில
செங்கல்ல நட்டு வச்சி
விபூதி குங்குமத்த
முகமெல்லாம் அப்பி வச்சி
லாந்தர் வெளிச்சத்தில
முனி போல தெரிஞ்சாரு
சாமியாடி மண்ணாங்கட்டி...

சடங்கு சாமான் தரை பரப்பி
நேரெதிரே குந்தச்சொல்லி
சலனமில்லா முகத்தோட
சுருட்டு சாராயம்
ஊதுவத்தி வாழைப்பழம்
கற்பூரம் குங்க மஞ்சா
ஒவ்வொன்னா எடுத்து வச்சி
பூஜைகளை செய்தாரு
நடு நடுவே வாய் அகட்டி
புரியாத பாஷையில
முனகவும் செஞ்சாரு...

பூஜை முடிக்கும் நேரம்
கரகரன்னு அறுத்த கோழி
கழுத்துல சொட்டுகின்ற
பச்சை ரத்தம் தொட்டெடுத்து
உச்சியில தடவி விட்டு
விபூதி குங்குமத்த
அசந்த நேரத்துல
மூஞ்சியில அடிச்சிவிட்டு
திரும்பிப்பார்க்காம
கூட்டிப்போகச் சொன்னாரு....

கழுப்பெடுத்த கையோட
அச்சத்தை காட்டாம
இருட்டுக்கு பயந்தபடி
அம்மாவின் கைபிடிச்சி
வீட்டுக்கு வந்தபின்தான்
முனி பிடிச்சி ஆட்டுவதாய்
கிலி வரத்தொடங்கியது...

விடிஞ்செழுந்த காலையில
அச்சமெல்லாம் விலகிவிட
கண்ணா மூச்சி விளையாட்டு
ஆடுகின்ற நேரத்துல
என் கண்ணு ரெண்டும்
மூடிநின்ன
மண்ணாங்கட்டி மகனோட
கை நெறைய மணக்கின்ற
கோழிக்கறி வாசத்துல
முனி மீது வச்சிருந்த
அச்சமெல்லாம் நிமிஷத்துல
மொத்தமாக
பறந்து போச்சி...

➤ சந்துரு

கடைகளில் சனக்கூட்டம்
கூரையில் ஏறி
நிற்கிறது பெயர்ப் பலகை!

அன்ஸார் எம்.எல்.எம்.
வாசனையால் நிறைந்தது உலகம்
பார்க்கவும், கேட்கவும்
தொட்டு உணரவுமான உலகில்
சில வாசனைகளே நம்மை
அவ்வப்போது வழிநடத்திச்செல்லும்...
நெருக்கடியான போக்குவரத்திலும்
நாசி துளைக்கும் ஏதோவொரு வாசம்
பள்ளிப்பருவத்தின் ஆசிரியையோ
கல்லூரிப் பருவத்தின்
யாரேனுமொரு நட்பையோ
நொடிப்பொழுதில்
நினைவில் கொண்டுவரக்கூடும்...
பசித்த பொழுதுகளின் பயணத்தில்
வழி மறிக்கும்
பிரியாணிக்கடை வாசமும்
பொறித்த மீனின் வாசமும்
இலவசமாய் நுகர வைத்து
நகரவிடாமல் இம்சிக்கும்...
பன்னீரின் வாசத்துடன் தொடங்கி
வெற்றிலை பாக்கின் வாசத்துடன்
நிறையும் திருமண வீடுகள்...
முதல் உறவின்
கூடல்பொழுதிலும்கூட
மல்லிப்பூ வாசம் கரைத்த
வியர்வையின் வாசமே
உச்சத்தை உணர்த்திச்செல்லும்...
சாலை நடுவே திறந்துகிடக்கும்
பெருமழையின் தொடக்கத்தில்
துளிகள் தட்டியெழுப்பியதில்
முளைக்கும் மண் வாசம்...
பசுமையின் வாசத்தை
புவியெங்கும் நிரப்பிவிட்டு
ஓய்வெடுக்கும்
மீண்டும் மண்ணுள்ளே...
ரோஜாக்களின் வாசத்தால்
ஆறுதல்படுத்தப்படும்
மரண வீட்டின் அழுகை
மறுநாள் விடியலில்
சாம்பலின் வாசத்தால் முடியும்...



➤ வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்



ஒரு தனிமை
ஒரு குவளை தேநீர்
ஒரு மிடறு மௌனம்
போதும்,
மனதின் நிர்வாணம் தேட..

தனிமையின்
ஒவ்வொரு துளியையும்
சுவைப்பதற்காகவே,
ஒவ்வொரு மிடறு மௌனத்திலும்
சுயத்தின் தேடலுக்கான சூத்திரத்தை
காலம் எழுதி வைத்துவிடுகிறது...

என் சுயத்தின் தேடல்கள்
தனிமைக்குள் சரண் புகும் போது
ஞானத்தின் ரகசியங்களை புரிந்து கொள்கிறேன்..

இந்த தேடல் மீது
எனக்கு தீராக் காதல் இருக்கிறது
மௌனத்துள் கலந்து
மௌனமே இறையாகி
அதனுடன் பயணித்து
அதன் நிழலில் வாழ்தல்
பேரழகாகிறது..

என் இருப்பே
அதன் எல்லைகளுள் வாழ்தலே
சௌகரியமென்று தீர்மானித்தவுடன்
நிதானம் கொள்கிறது மனது..

➤ சங்கரி சிவகணேசன்

# வேர்(று)உலகம்



வாகனங்களின் புகைமண்டலத்தை
நெரிசல்மிகுந்த பயண வழிகளை
இரைச்சலேற்றும் ஆலை ஒலிகளை
கர கரக்கும் மனிதக் குரல்களை
அத்தனையும் சற்று விட்டுவிட்டு
வேறு உலகம் போய் வந்தேன் !

வேர்கொண்ட வேறுலகம்
அங்கே விரிந்து கிடந்தது
வா மகளே வா என்று
என்னை பரிந்து அழைத்தது !

கைக்குழந்தைக் கொடிகள்
தவழ்ந்துகொண்டிருந்தன
சற்றுயர்ந்த செடிகள்
சிறுபிள்ளையாய் சிணுங்கின !

காலைசுற்றிய நாய்க்குட்டிகளாய்
புல்வெளிகள் குழைந்தன
கன்னங்களை உரசி உரசி
பட்டாம் பூச்சிகள் அலைந்தன !

சொல்பேச்சுக் கேட்டிடும்
நல் குழந்தைபோலே
கட்டெறும்பு கூட்டங்கள்
கட்டுப்பட்டு நடந்தன !

தண்ணீர்க்குடம் சுமந்த
தள்ளாடும் மூதாட்டிகளாய்
நத்தைக் கூட்டமெல்லாம்
மெது மெதுவாய் நகர்ந்தன !

குழந்தைகளைத் திட்டும்
அம்மாவைப்போலவே
கரையோர தவளைகள்
கத்திக்கொண்டே இருந்தன !

ஓடி ஓடி ஒளிந்துகொள்வதும்
தேடித் தேடிக் கண்டுகொள்வதுமாய்
மீன்களும் கொக்குகளும்
கண்ணாமூச்சி ஆடின !

மலைக் காடுகளின்
கடும் பாறைகள்
குளிரதனைத் தாளாமல்
நீர்ப்போர்வையினை
போர்த்திக்கொண்டிருந்தன !

டீசல் குடிக்காத
மாநகரப் பேருந்துகளாய்
பல ஒலிகளோடும்
பல வண்ணங்களோடும்
பறவைகள் எல்லாம்
வந்து வந்து போயின !

ஒற்றைக் கிளையில்
பத்துக் கிளிகள்
மொத்தமாய் அமர்ந்திருந்தன
அங்கும் ஏதோ ஒரு
காதல் பஞ்சாயத்துபோல !

வானத்தை தொட்டுவிடும்
உயர்ந்த மரங்களை பார்த்தேன்
மொத்தக் காடுகளையும்
கண்காணிக்கும்
காவலர்களாய்த் தோன்றின !

கால்கள் ரெண்டும்
வலிக்க வலிக்க
காட்டுலகை ரசித்து வைத்தேன்
கண்தொட்ட எல்லாவற்றையும்
எண்ணத்திலும் பதித்து வைத்தேன் !

விட்டுவிட்டு வருவதற்கும்
மனமில்லைதான் எனக்கும்
என் வீடுலகம் அழைக்குமே
என் செய்வேன் அதற்கும் !

வேர்கொண்ட வேறுலகே
எனக்கு விடைகொடு என்றேன்
போய் வா மகளே என்று
கிளைக் கைகளை அசைத்தன
மரச் சொந்தங்கள் !

➤ அம்பிகா குமரன்

# பாராமுகம்



நதியில் உருண்டோடிடும் மணல்
துகள்களில்
மலைகள் தட்டி உதிர்த்த உதாசீனங்கள் ஒட்டி
இருக்கின்றன

அழ இயலாமல் வேகமாய்
தேடிச்செல்கின்றது
ஆறுதல் ஒன்றிற்கு துகள்

கடல் சேர்ந்து கண்ணீரின் சுவையில்
வாழ முற்படுபவற்றை
கரை சேர்த்துவிடுகின்றது கடல்

கடற்கரையில் அமர்ந்து
வீடு வந்த பின்
என் கால்களில் ஒட்டியிருக்கின்றன
உதாசீனத்தின் மிச்சங்கள்

வெளியில் செருப்பை
பற்றியபடி காத்திருக்கும்
அத்துகள்களுக்கு

நாளை கடல் செல்லாமல்
மலையேற்றத்திற்கு தயாராகி கொண்டிருக்கும்
கால்கள்
என்ன சமாதானம் கூறும் என்றுதான்
யோசித்தவாறு
அமர்ந்து கொண்டிருக்கிறேன்

➤ மணிவண்ணன் மா



காற்றில் அசைந்த
கவிதைத் தாள்.

அதிகாலையை கடந்த
காலை நேரம்.

இதற்கு முந்தைய வரியில்
அதிகாலைக்கும் நள்ளிரவுக்கும்
மத்தியில் பொழிந்த மழை.

தன்னுள் பதிந்த சில்லிடலோடு
அயர்ந்து உறங்கும் மகளை
வருடியபடி கடக்கிறது காற்று.

வருடிய காற்றில்
காற்று மண்டலமெங்கும் கமழ்கிறது பூவாசம்.

பட்டாம்பூச்சிக்கு சேதாரமில்லாது
பிடிக்கும் சிறுவனின்
நுனிவிரலின் நுனியில்
இடது கண்ணத்தின் மத்தியை
பட்டும்படாமல் தொட்டதில்;
மெல்ல அசைகிறாள் மகள்.

ஆகச்சிறந்த கவிதை தொகுதியின்
கவிதைத் தாளொன்று திரும்பும்
நிறைவான நிறைவுடன்
நகர்ந்து நகர்கிறான் அத்தகப்பன்.

➤ துரை.நந்தகுமார்



நான் பருவத்தை எட்டிடாத வயதிலேயே சைக்கிளில்
ரவிக்கை பாவாடையை
விற்கும் அண்ணன்
எனக்கு மிக பரிச்சயம்..
ஜாக்கேட்டென்று....
காற்றை உள்வாங்கி
குரல்வளையை வலைத்து நெலித்து
அவர் எழுப்பும் சப்தம்
கிட்டதட்ட ஒரு ஸ்வரம் பாடுவதை போல..
அப்பொழுது எழும்
அவரின் குரலின் ஏற்றம்
இறக்கமோ அவ்வளவு அழகாயிருக்கும்..
வயலினை மீட்டும் நரம்பு
ஏறி இறக்குவதை போல அது..
பல ஆண்டுகள் கழித்து
மீண்டும் கண்டேன்
இன்றும் எங்கள் வீதியில்
அதே சைக்கிளில்
அதே அண்ணன்..
அதே போன்று உறக்க குரலில் குரல்வலையை
வலைத்து நெலித்து கொஞ்சம் கூட அதில்
பிசிறில்லை..
வருத்தம் என்னவென்றால்..
அவர் அதே ஸ்வரத்தை பிடித்துக்கொண்டிருப்பது
தான்.

➤ சரண்யாசத்தியநாராயணன்

ஆரம்பத்தில் என்னிடம்
நிறைய தேன்சிட்டுக்கள் இருந்தன
பரவலாகச் சுற்றித்திரிந்த காகங்கள்
படிப்படியாக வந்து சேர்ந்தன
சோடிக்குயில்கள் இரண்டை
புல்லாங்குழல் இசைக்கும்
பணியில் அமர்த்தினேன்
கண்கள் திறவாத குயில் குஞ்சுகளைப்
பேணிக்காக்குமந்தக் காகங்கள் நான்கை
முன்னோர்களென்று
இப்போது முதன்மையாக வைத்தேன்
அண்டங்காக்கையினைக் கூட
கொண்டாடி மகிழும் ஞானம் பெற்றேன்
சூழலை மாற்றிக்கொண்டதொரு மீன் கொத்தியும்
தற்செயலாக வாய்த்ததில் பெருமகிழ்ச்சியடைந்தேன்
ஜோதிட வேலைகளுக்கு
தப்பிப் பிழைத்த பச்சைக்கிளிகளும்
மிச்சக்கதைகள் பேசித் தஞ்சம் புகுந்தன
பத்துக்கும் குறையாத பன்றிக்குருவிகள்
பஞ்சம் பிழைக்க குழுவாக ஒண்டிக்கொண்டன
வாரம் ஓரிரு முறை வந்து போகும்
ஆண் மயிலொன்றை
வளைத்துப் போட்டது கூடுதல் சிறப்பென்பேன்
புறாக்கள் இல்லாத குறையை
மைனாக்கள் வைத்து சமரசமானேன்
ஓடியாடும் அணில்களிடம்
ஓய்வடையா தேடல் சுகம் கண்டுணர்ந்தேன்
எக்காலமும் பொழுதுகளைக்
கொக்காணியில் கழிக்கும்
ஒடக்காய்க்கும் முட்டையிட அடைக்கலம் தந்தேன்
இரைதேடும் பூச்சிப்புழுக்களின் இரைப்பைகளில்
என் அடிவயிற்றை ஒப்புவித்தேன்
சற்றும் சளைக்காத சித்தெறும்புகளிடம்
காலத்தேவையின் போதனைப் பெற்றேன்
வழி தவறி வந்த வானரத்தை
கிளைகளில் தொங்கவிட்டு
வீட்டுக்கொள்ளையில்
ஒரு வனத்தை உயிர்ப்பித்து விட்டேன்



➤ மகேந்திரன்கோ



புத்தகத்தோடு
உறங்கிப்போவதும்
எழுவதும் புதிதல்ல

நேற்று வாங்கிய புத்தகம்
என்றோ எழுதிய சொற்கள்
இன்றுதான் திறக்க முடிகிறது
புத்தகம் மரணிப்பதில்லை

முத்தமிடத்தெரியாதவனைப்போல
நடுப்பக்கத்தை திறக்கிறேன்

யாரோ சிவப்புநிற மையினால்
சில வாக்கியங்களை
கோடிட்டுக் காட்டிருக்கிறார்கள்
எனக்கு பொருந்தாது

எங்கள் வீட்டில் தோட்டங்களில்லை
மின்மினிப்பூச்சிகள் வருவதில்லை
தேவதைகள் வரம் தருவதில்லை
நத்தைக்கூட்டிற்குள்
நாங்கள் பயணித்ததில்லை
கூழாங்கற்களை தின்றதில்லை
வெண்ணிற நதிகளில் நீந்தியதில்லை

புத்தகத்தை இழுத்து சாத்திவிட்டேன்
நாடாக்களால் சங்கிலியிட்டேன்


இப்போது என்ன செய்வது
முதல் பக்கத்தை
நானெப்போது திறப்பது

வனாந்திரமென்றப் பக்கத்தில்
அம்முக்குட்டி மயிலிறகை வைத்துவிட்டாள்

இருவரும் காத்துக்கொண்டிருக்கிறோம்

ஒரு குட்டி மயிலிறகுக்காக

➤ ராம் பெரியசாமி



சரியாய் பத்தாவது கடுதாசியில்
பெரியத்தையிடம்
இங்கிருந்தே சரன்டர் ஆனார் அப்பா;
பதினொன்று பனிரெண்டாவதில்
பரஸ்பரம் பழம் விட்டுக்கொண்டனர் ;
பதிமூன்றாம் கடிதத்தில்
அத்தையின் பரம வைரி
அம்மாவுக்கெதிராய்
கொம்பு சீவும் படலம் ஆரம்பமாகியது;
பதினாலு பதினைந்தில்
அம்மா அடங்க மறுத்த
தன் தரப்பு காழ்ப்புகளை
அழுத்தி எழுதியிருந்தாள் அத்தை;
பதினாறு பதினேழுகளில்
தன் கிரகஸ்த கடமைகளை
பட்டியலிட்டார் அப்பா;
பதினெட்டில் அத்தை வேதாளம்
மீண்டும் முருங்கை ஏறியது;
பதிலுக்கு அப்பா வேதாளமும்
அடுத்த சில கடுதாசிகளுக்குள்
தம்பி அம்மா வயிற்றில் வளரலானான்;
இதுவரை நூறு கடிதங்கள்
எழுதியிருப்பாள் அத்தை,
அப்பாவும் வழக்கம்போல்
பதில் தர்க்கத்தால்
அம்மாவை காபந்து பண்ணினார்
இடைப்பட்ட காலங்களில்தான்
அவசர அவசரமாய்
எங்கள் ஐவரை பெற்றுப்போட்டு
தன்னிருப்பை ஸ்திரப்படுத்திக்கொண்டாள் அம்மா..

➤ கா.ஸ்ரீதரன்

# இதழ் சூழ்



இதழ்களில்
சூழ்கொண்ட
முத்தங்களை...
பிரசவிக்க
இடம் தேடும்
யானையாய்
அலைகிறேன்...

சில நேரம்
ஆதிவாசிகளை
சேர்க்கும் குகைகளை
கையோடே
தூக்கித்திரிகிறேன்...

ஊடலுக்குப்பின்
சிக்கி முக்கி
கல்லாய்
உரசிக்கொள்ளும்
இதழ்களுக்கு...
நீ
ஆதி
நீரூற்றின்
துளிகளை
பரிசளிக்கிறாய்...

முடிவிலியின்
விடியலில்
முத்தாய்ப்பாய்
கிடைத்து விடுகிறது
நெற்றியில் ஒரு

முத்தப்புள்ளி.

➤ தோழன் பிரபா



கடந்து போனவர்கள்
பட்டியலில் இருந்தார்கள்
அவர்கள்

முன்னொரு நாளில் சில
வாக்குறுதிகளை நாம்
கேட்காமல் அளித்தவர்கள்

நிஜம் என நம்பிக்கையை
நம் வசம் அளித்து நம்மைச்
சிலப் பொழுது பிரம்மிக்க
வைத்தவர்கள்

உயிரென நாம் நினைக்கத்
துச்சமாய் நம்மைத் துயரத்தில்
ஆழ்த்தி விட்டுச் சென்றவர்கள்
ஆச்சர்யப்படும் அதீதங்களை
அளவில்லாமல் அள்ளித்தந்துப்
போனவர்கள்

இப்படி நாம் கேளாமல் நம்மை
ஒரு அன்பின் பிரியங்களில்
திளைக்கச் செய்தவர்கள்

வாழ்வின் இறுதிவரை உடன்
வருவோம் என்றுரைத்தவர்கள்
இன்று அதே வாக்குறுதிகள்
அனைத்தையும் பிறிதோர்
அன்பிடம் அள்ளித்தருகிறவர்கள்
அந்த அவர்களைப் பார்த்தால்
ஒன்றுமில்லை நான் ஒரு வணக்கம்
சொன்னதாய்ச் சொல்லுங்கள்...

➤ உமா மஹேஸ்வரி பால்ராஜ்




பெருவொளிக்கு
குறுகும் விழியாக
அழுத்துமுன் அன்பில்
சிறுத்துக் கிடக்கிறதென்
சுயம்

➤ சுஜாதா கண்ணன்

ஒரு விழா
நீ வந்ததும் திருவிழா ஆகிறது
கொஞ்சம் நடந்து வாயேன்
தேர்த்திருவிழா பார்த்து
நாளாகிறது.

➤ மழைக்குருவி



என்னிலிருந்து நான்
சற்றே நகர்ந்து கொள்கிறேன்.

வரையறைக்குள் வகுத்துக்
கொள்ள முடியாத
இடர்ப்பாடுகள் ஒருபுறம்.

வட்டத்திலிருந்து
வெளியேற விரும்பாத
விசித்திரம் மறுபுறம்

பாசாங்கற்ற பரிபூரணியாய்க்
கொஞ்சம்..
வேடங்கட்ட விழையும்
வெறுமையாய்க் கொஞ்சம்..

என்னிலிருந்து சற்றே
நான் நகர்ந்து கொள்கிறேன்..

நானில்லாத
என் முரண்களுக்கு
நான் பொறுப்பல்ல..

➤ மதுரா



எதிர்பாராத கணத்தில் ஒரு கவிதை தோன்றுவது
போலத்தான்
என் முன்னால் நீ தோன்றுவதும்
மேகப் பொதியில் மயங்கிச் சரியும்
மிருதுவான மெல்லிய நிலவு
அற்றைத் திங்களில் இளைத்துப் போன
ஒரு அபலைச் சருகு
உமிழ்நீர் சுரக்காமல் உட்கொள்ளப்படும்
செரிக்காத உணவினைப் போல
உருளும் உன் நினைவுகள்
வாய் பிளந்த மலைப்பாம்பாக
இந்த இரவை விழுங்கிக் கொண்டிருக்கிறது
எதிர்பாராத கணத்தில் மரணம் தோன்றுவது போல்
தான்
ஒரு கவிதை தோன்றுவதும்
அந்த கவிதைக்குள்
நீ தோன்றுவதும்

➤ **தங்கேஸ்**



எல்லோராலும் அறியப்படும்
சூர்யா என்ற பெயராலேயே
நானும் அவனை அறிந்திருந்தேன்.
என் போன்ற சிலரின் “டேய் தம்பி”க்கும்
என்னுடைய “வா...சூர்யா”வுக்கும்
ஒரே பாவனை முகம் தான் காட்டுவான்
அவ்வப்போது “லெஃப்டு” எனவும்,
சில சமயம்
அவன் உருவத்தோடு சேர்ந்த
கெட்ட வார்த்தையாலும்
பிரியத்தோடு விளிக்கப்படக் கேட்டிருக்கிறேன்.
அவனுக்கு ராஜவேல்
என்றொரு பெயர் இருந்தது
எனக்குத் தெரியாது
அவன் புகைப்படம் அச்சிட்ட
கண்ணீர் அஞ்சலி
போஸ்டரைப் பார்க்கும் வரை.

சுப. முத்துக்குமார்

# கருணையின் கடவுள்



ஊரடங்கால் வெறிச்சோடி
போயிருக்கும் பூங்காவில்
கனத்த தோள்பையுடன்
ஊன்றுகோல் உதவியுடன்
மெதுவாக உள்நுழைகிறார் ஒரு பெரியவர்
ஆங்காங்கே நடைப்பயிற்சி
செல்லும் ஓரிருவருக்கு
புன்னகையை பரிசளித்து விட்டு
ஒவ்வொரு மரத்திற்கு கீழும்
தானியங்களாய் மாற்றி
வைத்திருக்கும் தன் கருணையை
பையிலிருந்து எடுத்து போடுகிறார்
சட்டென்று கீச்சிட்டபடி கரைந்தபடி
பலவித ஒலிகளை
நன்றியாய் மாற்றி
சிறகுகள் படபடக்க வந்தமரும்
பறவைகளின் கண்களில்
இவர் கடவுளை காண்கிறாராம்
நான் இவரின் உருவில்
கடவுளை காண்கிறேன்......

➤ பிரபுசங்கர் க



ஒரு புனைவுக்குள் சிக்கிக் கொண்டு
வெளிவர மறுக்கிறேன்...
அழகான கட்டமைப்புகள்
மெல்ல விழுங்கத் தொடங்குகின்றன!

புனைவிற்குள்
புனைவெழுதி புனைவில் குளித்து ...
புனைவாய் இறப்பவனை
வாழ்க்கை என்ற ஒற்றைச் சொல் அழுத்துகிறது!

இறுதிப் பக்கத்துக்கு
பொழிப்புரை எழுதுகிறவனின் நாவில்
மரப்பு நோய்!

தொண்டைக்குள் நழுவ
விளக்கெண்ணெயே வேண்டும் என்கிறவன்
சுவையறியாதவன்!

காகிதக் கப்பல்கள்
பயணத்திற்கு உகாததென்றாலும்
நினைவுக் கடலில்
அஃது எப்போதுமே நீந்திக் கொண்டிருக்கிறது!

சிக்கல்களை
அவிழ்க்கும் விரல்களின் நோவினையை
ஏளனம் என்றே
அவர்கள் பெயரிட்டு அழைக்கட்டும்..

நான் மெல்லக் கடந்து போகிறேன்!

“ம்“

➤ முகமது பாட்சா




நான் வசிக்கும் ஊரில்
அம்மாவின் சாயலிலிருந்த
பெண்ணிடம் பேசியதை
பெருமையாய்
பேசிக்கொண்டிருக்கிறேன்...
என் சாயலில் இருந்தவனை
வீட்டுக்கு
அழைத்து உணவு
பறிமாறிக்கொண்டிருக்கிறாள்...அம்மா!

➤ மு.முபாரக்

சிறு புல் தானே
என நினைக்காதீர்
அது பறவைகளின் கூடு.!

➤ த. ரவீந்திரன்



கண்ணாடிக்குள்
தன்னைப்போலொரு குருவியைப்
பார்த்த கணத்தில்
கொத்தத் தொடங்குகிறது குருவி

கண்ணாடிக்குள்ளிருந்து
ஒரு குருவி
கொத்தும் குருவியைக்
கொத்தத் தொடங்குகிறது

எந்தக் குருவியாலும்
ஒன்றை மற்றொன்றால் வெல்லமுடியாமல்
பறந்துபோனதும்
தனியாக நிற்கிறது கண்ணாடி

மறுபடி அந்தக் குருவி வந்ததும்
அதே நேரத்திற்கு
கண்ணாடிக்குள்ளிருந்த
குருவியும் வந்துவிட
சண்டை தொடங்குகிறது

சண்டையைக் கண்டு
கைதட்டிக்கொண்டேயிருக்கும்
கண்ணாடி
எந்தக் குருவிக்காகக் கைதட்டுகிறது
என்பதை மட்டும் சொல்வதேயில்லை

➤ சௌவி



அம்மாவுக்கென படைத்து வைத்த
உணவை எந்த காகமும் தொட வரவில்லை
காத்திருந்து ஒரு பருக்கையினை நாவில்
வைத்தேன்
வந்து சேர்ந்தன சில பல காக்கைகள்
அம்மா காக்கைகளும் புரிந்து வைத்திருக்கின்றன
பிள்ளை உண்ட பின்தான்
தான் உண்பதென்று....

➤ கதிரவன் வீ

பக்கம் வந்து
வாலாட்டும்
நாய்க்குட்டி நீயென்பது
அக வரலாறு
என் மீது விழும்
பனிதுளி
நீயானது கவிதை
நாள்தோறும் அதிகாலை
பார்க்க வரும்
ஆதவனில் நீ
இருப்பதாய் ஒரு நம்பிக்கை
நான் வாழும்போது உன் மரணம்
இறந்துபோன ஒன்று
நான்
பார்த்திருந்தால்
நீ வருகிறாய்.

➤ குமரன்விஜி

# அப்பாவின் சைக்கிள்



பழைய
ஹெர்குலஸ் தான்
அப்பாவின் ஆஸ்தான வாகனம்...

எப்போது
ஏறினாலும்
பறக்கத் தொடங்குவோம்
அப்பாவோடு நாங்களும்...

அக்கா சடங்கிற்கு
சரக்குந்தானதும்,
அண்ணனுக்கு
அடிபட்டபோது
அவசர ஊர்தியானதும்
அப்பாவின் சைக்கிள்தான்...

கழன்று போகும்
செயினை அடிக்கடி
சரிசெய்தவர்,
எப்போதாவது
மாற்றிக் கொள்வார்
டயரும்,ட்யூப்பும்...

அப்பா இல்லாத
இந்நாட்களில்
யாரும் தொடுவதேயில்லை
அப்பாவின் சைக்கிளை...

ஏதோ ஒரு முன்னிரவில்
அப்பாவின்
நினைவுகளில்
நனைகையில்
சைக்கிள் பெடல்
மிதித்தால்.,

சக்கரத்தின் கம்பிகளுக்கிடையே
அழகாகச் சிரிப்பார்.,

அப்பா

➤ இனியவன் காளிதாஸ்



வீதியில்
உயரமான கயிற்றின் மீது
தள்ளாடி நடக்கிறது
ஏழ்மையின் பாதங்கள்.

பேருந்தில்
பார்வையற்றவன்
வாசிக்கும் புல்லாங்குழலில்
இசையாகிறது வயிற்றுப்பசி.

இரயில் நிலைய பாதசாலையில்
குட்டிக்கரணம் அடித்து
வறுமையை
நிரூபிக்கிறாள் ஏழைச் சிறுமி.

தெருவோரம்
கால்களால் வரைந்தவனின் ஓவியத்தில்
கவலையோடு தெரிந்தான்
புத்தன்.

'நல்ல வேளை...
இப்படியொரு நிலையை
இறைவன் நமக்குத் தரவில்லை' என்ற
நிம்மதிப் பெருமூச்சில் வீசிய
சில்லறைகளில்
திவ்யமாகச் சிரித்துக் கொண்டிருந்தார்
கடவுள்.

➤ தி. கலையரசி



பிரேத மனிதனிடம்
கொஞ்சம்
கதைக்கலாம் என்று இருக்கிறேன்


கைகால்கள் சுருக்கப்பட்டு
குருதியுறைந்து
வெள்ளுடை தரித்தவனிடம்
சொல்வதை கேட்கும்
திறனிருக்குமா ?

கேட்டுவிட்டு
பதிலுரைப்பானா ?

தெரியாது
தெரியவே தெரியாது

கையில் அவனுக்கு பிடித்த
தேநீர் இருக்கிறது
குடித்துமுடிப்பதற்குள்
கடந்துவிடவேண்டும்
இவ்வறையை விட்டு.....!

➤ கருவை ந.ஸ்டாலின்



ஓரிரு
இறப்பு செய்திகளோடுதான்
ஒவ்வொரு நாளும்
அழைப்பு மணி
அடிக்கப்படுகிறது,

உறக்கம் கலைந்து
முகநூலை திறந்தால்
அங்கிரண்டு
மரண நிகழ்வு
முக்காடிட்டு
அமர்ந்திருக்கின்றது

வாழ்த்துச் செய்திகளை
எழுதி எழுதி
குவித்த விரல்கள்
இப்போதெல்லாம்
ஸிமிறி போட்ட பின்
மரண தண்டனை
வழங்கிய பேனா
முனையாய்
நொறுங்கி விழுகிறது,

உறவுகளின் இழப்பிற்கு
வடித்த கண்ணீரின் ஈரம்
உலரும் முன்
அடுத்தடுத்த இழவுச் செய்தி
அடவு கட்டி நிற்கிறது,

வழிஅனுப்பி வைக்க
முடியாத
இறுதியாத்திரையில்
ஆறுதல் கூற வேண்டிய
வார்த்தைகளை
தொலைவில் இருக்கும்
நான்
என்ன செய்ய?

எப்போது வரும்?
மரணமே மரணித்துவிட்டதாய்
ஓர்
மகிழ்வானசெய்தி ?

➤ அமுதா தமிழ்நாடன்



குடும்பமாய்
கோவிலுக்கு போனோம்
அவர்கள் வரம் வாங்க
நான் பலூன் வாங்க

வன்மையாய் அது
மறுக்கப்பட்ட நாளில்
சபதமெடுத்தது
என் மனக்குழந்தை
இனி சொந்தக்காசில் தான்
பலூன் வாங்குவதாய்...

இதோ
பத்து பலூன் வாங்கிவிட்டேன்
பால்யத்தை தொலைத்தபின்பு...

➤ தீபிகா நடராஜன்

நீண்ட சிறகிருந்து
என்ன பயன்.....
சிறைபட்ட பின்....

➤ நிஷா வெங்கட்.



இரகசியமாய்
புத்தகப்பைகளுள்
இரவுகளில்
நித்திரைப்பாய்களுடன்
எண்பது தொண்ணூறுகளின்
ஐ போன்
சாம்சுங் கலக்சி
...
“அம்புலிமாமா”

கற்பனை கருக்கட்டி
இறக்கைகளுடனே
ஜனித்துப் பறந்தது
இதன் ஏதோவொரு
பக்கங்களில் தான்.

விக்கிரமாதித்தனிடம்
வேதாளம் கேட்ட
கேள்விகளின்
பதில் தேடி
குளம்புகள் கொதித்து
கொப்பளமாயின
அநேக நாட்கள்
எங்கள்
சிந்தனையின் குதிரைக்கு.

ஒடிந்து விழுகின்ற
மெலிந்த பெண்களின்
வசீகர வதனங்களை
வரைய...
ஓவியக்கவிதைகளைதவிர
ஒருமொழியிலும்
வார்த்தைகள் கிடைக்காது
வர்ணங்களை குழைக்க..!

மாயாவிக்குழந்தைகளை
மடியில் தாலாட்டியபடி
அம்புலிமாமாவில் தான்
அரும்பு வயதுகள்
விரியத்தொடங்கின.


இன்னமும் .....
பாம்புப்புற்றை
பயமின்றி குற்றிய
இளவரசியின் அழகு
பசுமையாய்
பச்சைகுத்தியிருக்கின்றது
ஞாபகப்பக்கங்களில்.

வீட்டுக்கு வீடு
அம்புலிமாமாவை
அனுப்பி எடுத்து
நீல் ஆம்ஸ்ரோங்கையே
நிலை குலையச்செய்து
பாட இடைவேளைகளில்
கூடி இருந்து
நேரடி விமர்சனம்
செய்தோம்.

புத்தகங்களைத்தவிர
சொத்துக்களே இல்லாமல்
செல்வராய் இருந்த நாம்
தொழில்நுட்பம்
வளர்ந்த
தொடுதிரையின் யுகத்தில்
ஏழையாய் போனோம்
நல்ல புத்தகங்களை
தொலைத்து..!

➤ நளாயினி ராஜரத்னம்

# திணிப்பு ஞானம்



பிரிந்துவிட்டான் என்று உணந்ததும்...
ஞானம் அடைந்த யசோதரைக்கு
தேவைப்படவில்லை போதிமரம்...

பெற்றதல்ல கிடைத்தது
அந்தத் திணிப்பு ஞானம்...
சீடர்களுகளின்றி கைப்பிள்ளைக்கே
கற்றுத் தந்தாள் உலகம்...

வலியோடு பெற்று,வலியோடு ஏற்ற
உள்வீட்டுத் துறவு
வெந்து தணிந்த நிலை...
நினைத்ததில்லை யாரும்...

சித்தார்த்தன் மறந்து சென்றபின்
புத்தரைப் பற்றி ஏதுமில்லை
எந்த யசோதரைக்கும்...!!!

➤ கிருஷ்டினா அருள்மொழி



பலூன் ஒன்று வெடிக்கின்றபோது
வண்ணத்தை குழைத்தக் காற்று
நொடியில் மொத்தமாய் இழக்கிறது

நியூட்டன் விதி நிற்கிறது
கிளைகளில் இருந்து உதிர்ந்தவை
மரத்திற்கே பாத பூஜை செய்கிறது.

பறக்க விடப்பட்ட நூல் போல
பாதியிலே கந்தலாகிப் போனது
பரிதவிப்பாய் இளம் பெண் வாழ்வு

உறையிலடப்பட்ட காற்று
உரக்கச் சிரிக்கிறது
வெடித்து அதன்
சுதந்திரத்தைப் பேசுகிறது

உன்னோடு விளையாடிக்கொண்டிருந்த
என் காற்று தனியே
விசும்பிக்கொண்டிருக்கிறது.

➤ வீரசோழன்.க.சோ. திருமாவளவன்


PADAIPPU
படைப்பு பெருமையுடன் வழங்கும்
என்னழகே என்னுயிரே
வெளியீடு விரைவில்